# பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைக்கான சமூக பொருளாதார உளவியல் காரணங்களும் அதன் விளைவுகளும் : சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவினை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

கீர்த்திகா சுந்தரலிங்கம்,[1] முஹம்மட் பௌவுஸ்தீன் பமீஸ்[2]

[1]*சமூகவியல் துறை, தென்னாசியப் பல்கலைக்கழகம், புதுடெல்லி*

[2]*சமூக அதிகாரி, ஒருங்கிணைந்த நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டம், நீர்ப்பாசன அமைச்சு*

nanthankeerthy93@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இன்று உலகளாவிய ரீதியில் தீவிரமடைந்துள்ள பிரச்சினைகளில் ஒன்றாக சார்ந்த சமூக பொருளாதார உள பிரச்சினைகள் உள்ளன. இப்பிரச்சினைகளில் வீட்டு வன்முறை முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இன்று இவ் வீட்டு வன்முறையின் தாக்கம் குடும்பங்களிற்கு அப்பால் சமூக மட்டத்தில் பாரியதொரு பிரச்சினையாக மாறி வருகின்றது. ஆய்வின் பிரதான நோக்கமாக பெண்களிற்கெதிரான வீட்டுவன்முறைக்கான காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்வதுடன், அதனைத் தடுப்பதற்கான பரிந்துரைகளையும் முன்மொழிதலினை மையமாகக் கொண்டுள்ளது. ஆய்வானது கலப்பு முறை வடிவம் பயன்படுத்தப்பட்டடுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானம், பிரதான தகவல் வழங்குனர் நேர்காணல், விடய ஆய்வு ஆகியனவும், இரண்டாம் நிலைத் தரவுகள் பிரதேச செயலக மற்றும் மாவட்டச் செயலக வீட்டு அறிக்கைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், இணையத் தளங்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. பனிப்பந்து மாதிரியெடுப்பு முறையைப் பயன்படுத்தி ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில மையமாகக் கொண்டு (100) பேர் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டது. பண்பு ரீதியாக தகவல்களை கருப்பொருள் பகுப்பாய்வு அடிப்படையிலும் (Thematic Analysis) புள்ளிவிபரத்தரவுகளினைப்(SPSS) பயன்படுத்தி விபரணப் புள்ளிவிபரவியல் ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் பகுப்பாய்வின் அடிப்படையில் 2010-2018 விவாக வருடத்திற்குப்பட்டவர்கள் 22%வீட்டு வன்முறைக்குட்பட்டடிருப்பதையும், 77% இந்துக்களாவும், வயது அடிப்படையில் வீட்டு வன்முறைக்குபட்டபவர்களில் 27%னர் 31–35 வயதிற்குட்பட்டவா்களாகவும, 71% இடைநிலைக்கல்வி(6-11)யையும், குடும்பத்தலைவரது தொழிலாக 19% உள்ளனர். இக்குடும்பங்களின் 25001-30000 உட்பட்ட 42% வருமானம் பெறக் கூடியவர்களாகவும் உள்ளனர். வீட்டிலே உள்ளவர்களிடையே ஏற்படுகின்ற சண்டைகள் தான் வீட்டு வன்முறை என 47%குறிப்பிட்டனர். பொருளாதார ரீதியிலான வீட்டு வன்முறைக்கு உட்பட்டதாக கூறிய 128 பெண்களில் ஒருவர் தமக்கு 2 அல்லது 3 சவால்கள் இருந்துள்ளது எனக் குறிப்பிட்டு இருந்தார்கள். பொருளாதார சவால்களை சமாளித்தினைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து 20%மானோர் பெற்றோர் சகோதரர்களின் உதவியினைப் பெற்றும் 19%னோர் சீட்டுக்கட்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டும், 14% மானோர் கடன் வாங்குதலினையும் பொறிமுறையாகக் கொண்டுள்ளனர். பாலியல் ரீதியிலான வீட்டு வன்முறைகுப்பட்டதாக 4%பதிலளித்ததுடன், 30%மானோர் நோயுற்றிருக்கும் வேளை பாலுறவிற்கு கட்டாயப்படுத்தலினை குறிப்பிட்டனர். சமூக ரீதியான 34%மானோர் பெரிதாக சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை எனக் குறிப்பிட்டனர். அதிகமானவர்கள் இவ்வன்முறை சார்ந்து 30% பிரதேச செயலகத்தினரிடமும் முறைப்பாடு செய்துள்ளனர். 67%மானோர் வீட்டு கௌரவம் பாதிப்படையும் என்பதனாலும், 14%மானோர் கணவன் என்பதாகவும் பதிலளித்துள்ளனர். ஆகவே பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைக்கான சமூக பொருளாதார உளவியல் காரணங்களும் அதன் விளைவுகளையும் கண்டறிந்துள்ளதுடன், வீட்டு வன்முறையைக் குறைப்பதற்கான பரிந்துரைகளினை ஆய்வானது முன்வைக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** *பெண்கள், வீட்டு வன்முறை, சமூகக் காரணிகள், பொருளாதாரக் காரணிகள், உளவியல் காரணிகள், விளைவுகள்*

## 1. ஆய்வு அறிமுகம்

இன்று சமூகத்தில் முக்கிய பகுதியினராகக் காணப்படும் பெண்கள் அவர்களது வாழ்வில் பல்வேறுபட்ட பிரச்சினைகளிற்கும் வன்முறைகளிற்கும் முகம்கொடுத்து வருகின்றனர். இப்பிரச்சினைகளில் வீட்டு வன்முறை முக்கிய இடத்தினைப்பெறுகின்றது. இவ்வீட்டு வன்முறையினை அதிகளவில் எதிர்கொள்பவராகப் பெண்கள் காணப்படுகின்றனர். இன்று இவ் வீட்டு வன்முறையின் தாக்கம் குடும்பங்களிற்கு அப்பால் சமூக மட்டத்தில் பாரியதொரு பிரச்சினையாக மாறி வருகின்றது. குடும்பம் என்பது ஒரு பாதுகாப்பான இடம் என்றும் வன்முறைகளில் இருந்து பாதுகாப்புப் பெறவும் மற்றும் வாழ்வாதாரத்தினையும், பாதுகாப்பினையும் குடும்ப உறுப்பினர்களிற்கு வழங்கும் இடமாகவும் அது இருக்கும் என்ற எண்ணத்தை தருகின்றது (Bamettetal,1997). உண்மையில் பெண்களிற்கு எதிரான தனிப்பட்ட வன்முறைகள் அதிகம் இடம் பெறுகின்ற இடமாக குடும்பம் காணப்படுகின்றது (Moonachie and Vanzyl,1997). குறிப்பாக வீட்டு வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களது பிரச்சினைகளின் தீவிரத்தன்மை இன்று அதிகம் பேசப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களின் சதவீதத்தினை நோக்குகின்ற போது பாகிஸ்தானில் 90% மான பெண்கள் அவர்களது வீடுகளிலேயே வன்முறையை அனுபவிக்கின்றார்கள். பங்களாதேசில் 47% மான பெண்கள் உடல் ரீதியிலான வன்முறையினை தங்களது வாழ்க்கைத்துணைவரால் அனுபவிக்கின்றனர் (சர்வதேச குற்றத்தடுப்பு மற்றும் பாதிக்கப்பட்டோர் நலம் நாடும் மையம், 2015). மேலும் என்பது நாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு ஒன்றிலே(60) அறுபது வீதமான பெண்கள் உடலியல், உளவியல், பாலியல் மற்றும் பொருளாத ரீதியாக பாதிக்கப்படுகின்றனர் எனவும் அதுவும் அப் பெண்களது கணவன்மாராலேயே ஏற்பதுத்தப்படுகின்றது (Ellsberg & Heise,2005,WHO multi-country study on women"s health and domestic violence).

மேலும் "வீட்டு வன்முறை என்பது அது தனிப்பட்டது என்ற எல்லைக்குள் இடம்பெறுவது, பொதுவாக அது உறவினர்களிடை அல்லது சட்டப்படியான வகையில் உருவாகும் நெருக்கமான உறவுடைய தனிபர்களுக்கு இடையில் எழும் வன்முறையாகும். இதுவொரு பால்நிலை சார்ந்த குற்றமாகும்.வீட்டு வன்முறை என்ற சொற்பிரயோகம் ஆண் - பெண் இரவரையும் சுட்டும் பொதுச் சொல்லாயினும் ஆண்களால் பெண்கள் மீது நிகழ்த்தப்படும் வன்முறையையே இது குறிக்கின்றது."(குமாரசுவாமி 1996). இலங்கையிலே வீட்டுவன்முறை தொடர்பில் 60க்கும் மேற்பட்டோர் உடலியல், உளவியல், பாலியல் மற்றும் பொருளாதார வன்முறை என ஏதோ ஒரு வன்முறையால் பாதிக்கப்படுகிறார்கள். சிறுவர், பெண்,பிரிவு அமைந்துள்ள பொலிஸ் நிலையங்கள் இருந்த 36 இடங்களில் 90000 வன்முறை பதியப்பட்டுள்ளது (2008 ஆம் ஆண்டு மகளிர்,சிறுவர் தொடர்பான பொலீஸ் அறிக்கை).

அந்த வகையிலே ஆய்வுப் பிரதேசத்திலே இரண்டு வருட காலங்களிலே வீட்டு வன்முறையின் வடிவங்களான உடலியல் ரீதியாக காயம் ஏற்படல், உதைத்தல், குத்துதல், முதலானவையும் உளவியல் ரீதியாக அவமரியாதையாக நடத்தல், மற்றவர்கள் முன்னிலையில் கேலி செய்தல், பாலியல் ரீதியாக பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தல், நோயுற்ற நிலையில் பாலுறவிற்கு கட்டாயப்படுத்தல், மற்றும் பொருளாதார ரீதியாக சீதனம் கேட்டுத் துன்புறுத்தல், மற்றும் பொருளாதா ரீதியாக சீதனம் கேட்டத் துன்புறுத்தல், வீட்டுச் செலவிற்கு போதிய பணம் கொடுக்காமை ஆகிய வீட்ட வன்முறைகளிற்குள் பெண்கள் எள்ளாக்கப்படுகிறார்கள், இதற்கு சமூகக் காரணிகள், (பற்றாத பொருளாதரம்), குடும்ப காரணிகள் (புரிந்துணர்வின்மை) போன்றன காரணங்களகாவுள்ளன. இதனால் வீட்ட வன்முறைக்குள்ளான பெண்கள் சமூக, குடும்ப, ஆரோக்கிய ரீதியில் பெரும் சவால்களை எதிர்கொள்கிறமையே ஆய்வுப் பிரச்சினையாகும்.

மேலும் யாழ்ப்பணத்தினைப் பொறுத்தவரை பெண்களிற்கெதிரான வீட்டு வன்முறையின் தன்மை அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் பல்வேறுபட்ட பிரதேசங்களிலும் வீட்டு

வன்முறையானது இடம் பெற்று வருகின்றது. அந்தவகையில் 2016 ஆம் ஆண்டு 335 வீட்டு வன்முறைச் சம்பவங்களும், 2017 ஆம் ஆண்டு 227 வீட்டு வன்முறைச் சம்பவங்களும், 2018 ஆம் ஆண்டு 246 வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. (யாழ்மாவட்டச் செயலக அறிக்கை). இந்த வகையிலே பெண்களிற்கெதிரான வீட்டு வன்முறை என்பது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பிரதேசங்களிலும் முறைப்பாடுகள் செய்கின்ற போக்கு காணப்படுகின்றது. இதனை விட முறைப்பாடுகள் செய்ய முடியாமல் பல பெண்கள் உடலியல், உளவியல், பாலியல் மற்றும் பொருளாதார ரீதியாக வீட்டுவன்முறைக்கு உட்படுகின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்ற ரீதியிலும் ''வீட்டு வன்முறை'' என்ற ஆய்வினை மேற்கொள்வதற்கு ஏற்ற பிரதேசமாகக் காணப்படுகின்றது.

**2. ஆய்வின் நோக்கம்**

2.1.பிரதான நோக்கம் : பெண்களிற்கெதிரான வீட்டுவன்முறைக்கான காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்வதுடன், அதனைத் தடுப்பதற்கான பரிந்துரைகளையும் முன்மொழிதல்.

**2.2. சிறப்பு நோக்கங்கள்**

- பெண்களிற்கெதிராக காணப்படுகின்ற வீட்டு வன்முறையின் வடிவங்களை அறிதல்
- பெண்களிற்கெதிரான வீட்டுவன்முறையினை ஏற்படுத்துவதில் குடும்ப சமூக செல்வாக்கினை மதிப்பிடுதல்.
- வீட்டுவன்முறையைத் தடுப்பதற்கான பரிந்துரைகளையும் முன்மொழிதல்.

**2.2. ஆய்வு வினா**

''பதின்ம வயதுக் கர்ப்பத்திற்கான சமூகப் பொருளாதார உளவியல் காரணங்களும் அதன் விளைவுகளும்'' எனும் இவ் ஆய்வின் ஆய்வு வினாக்களாக அடைந்தன.

- பெண்களிகெற்கெதிரான வீட்டு வன்முறையின் வடிவங்கள் யாவை?
- பெண்களிற்கு எதிரான வீட்டுவன்முறையினை ஏற்படுத்துவதில் சமூக காரணிகளின் இடம் எத்தகையது?
- பெண்களிற்கெதிரான வீட்டுவன்முறையினை ஏற்படுத்துவதில் குடும்பத்தின் வகிபங்கு யாது?
- வீட்டுவன்முறைக்குட்படும் பெண்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?
- வீட்டுவன்முறைக்குட்படும் பெண்கள் குடும்பத்தில் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?
- வீட்டு வன்முறையினால் பெண்களது ஆரோக்கியம் தொடர்பான நிலைப்பாடு என்ன?

**3. இலக்கிய மீளாய்வு**

நாம் எந்தவொரு ஆய்வினை மேற்கொண்டாலும் அந்த ஆய்வுடன் தொடர்புபட்ட ஏற்கனவே வெளிவந்த ஆய்வுகள் பற்றி ஆராய்வது அவசியம் ஆகும். ''பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைக்கான சமூக பொருளாதார உளவியல் காரணங்களும் அதன் விளைவுகளும் : சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவினை மையமாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு'' எனும் இவ்வாய்வுடன் தொடர்புடைய ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவு செய்யப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது.

வீட்டு வன்முறைத் தடைச்சட்டம், குடும்பக் கருத்தியல் மற்றும் இலங்கையின் பண்பாட்டுக்கதையாடல்கள் பற்றிய ஓர் ஆய்வு (2011)இவ்ஆய்விலே இலங்கையிலே வீட்டுவன்முறையின் தன்மை பற்றிய, 2009 – 2011 காலப்பகுதியில் இனத்துவக் கற்கைகளுக்கான (ICES) நிறுவனம் வீட்டுவன்முறை பற்றிய அளவுசார் கணிப்பீடு ஒன்றைச் செய்தது.இங்கே வீட்டுவன்முறை பற்றிய கருத்திலே வீட்டுவன்முறையின் இரு அம்சங்கள் கவனத்திற்குரியவை, ஒன்று இது பற்றி அரசு எதுவும் செய்ய முடியாத நிலையுள்ளது.இரண்டாவது இவ் வன்முறை பால்நிலை சார்ந்தது. (gender specific) ஆகையால் இதனை வெறுமனே ஒரு குற்றவியல் நீதிசார் பிரச்சினையாக இல்லாமல் மனித உரிமை சார் பிரச்சினையாகவே நோக்குதல் வேண்டுமெனப்பட்டது. இருந்தாலும் தந்தை வழி ஆணாதிக்க கட்டமைப்புக்களில் ஆழமாகக் காலூன்றி நிற்கின்ற இலங்கை போன்ற ஒரு நாட்டில் கூட பெண்ணியக் கோரிக்கைகளிற்குச்

செவிசாய்த்து சட்ட சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடியும் என்பதை வீட்டு வன்முறைத்தடைச் வட்டம் இயற்றப்பட்டமை நிருபித்துள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில்வீட்டு வன்முறையால் பாதிப்படைந்த பெண்கள், எவ்வளவு தூரம் அதனைப் பயன்படுத்தி தமக்ககான நீதியைக் கேட்கிறார்கள் என்பது கேள்விக் குறி என்ற வகையில் இவ் ஆய்விற்காக இவ் ஆய்வு நூல் இலக்கிய மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

“Domesstic violence against women and girls” (1999),UNICEF (United Nations Children”s Fund Innocenti Research Centre Florence , Italy. இது இங்கே கைத்தொழில் நாடுகளான கனடா, யப்பான், நியூசிலாந்து, சுவிற்சலாந்து, லண்டன் ஐக்கிய அமெரிக்கா,மேலும் ஆசிய நாடுகளான கம்போடியா, இந்தியா, கிழக்காசிய நாடுகளான எகிப்து, இஸ்ரேல், ஆபிரிக்க நாடுகளான கென்யா, உகண்டா, சிம்பாவே போன்ற நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளான போலந்து, ரஷ்யா, தஜிகிஸ்தான் போன்ற நாடுகளை மையப்படுத்தியதாகக் காணப்படுகின்றது. பெண்களிற்கெதிரான வீட்டுவன்முறைகளில் உடலியல்,உளவியயல்,மற்றும் பாலியல் ரீதியிலான வன்முறைகளும் இதனால் பெண்களது அடிப்படை உரிமை மறுப்பு, சுகாதாரப் பிரச்சினைகள், பிள்ளைகள் மீதான பாதிப்பு என்பன விளைவுகளாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் உலகளாவிய ரீதியில் பெண்களிற்கெதிரான வீட்டுவன்முறை காணப்படுகின்றது. இதற்கு எதிரான கொள்கை வகுப்பதில் அரசு மற்றும் சர்வேதச அரச சாரா அமைப்புக்கள் தீர்வுகளை வழங்க வேண்டும் எனப்படுகின்றது. எனவே இந்த வகையிலே வீட்டு வன்முறை என்ற இந்த ஆய்வுடன் தொடர்புடையதாகக் காணப்படுவதால் இவ் ஆய்வு நூல் இலக்கிய மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

Jenny mouzos, Tonny mokki (2004) இவ் ஆய்வானது அவுஸ்ரேலியாவில் 2002ஆம் ஆம் ஆண்டு இடம்பெற்றது. இங்கு 18 – 69 வயதிலான பெண்களைக் கொண்டு செய்யப்பட்டதாகும். மொத்தமாக 6677 பெண்கள் வீட்டுவன்முறையினால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகின்றது. 6677 வீட்டுவன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களும் IVAWS ஆல் தொலைபேசி மூலமாக நேர்காணல் செய்யப்பட்டுள்ளனர். பெண்களிற்கெதிரான உடலியல் ரீதியிலான வீட்டுவன்முறை (காயம் ஏற்படுதல்) பாலியல் ரீதியிலான வீட்டுவன்முறை (விருப்பமில்லாது பாலியல் ரீதியில் தொடுதல்) உளவியல் ரீதியில் (மனம்நோகும் படி பேசுதல்) என்ற அளவில் காணப்படுவதாகவும், இத்தகைய வீட்டுவன்முறைக்கான காரணங்களாக மதுப்பாவனைப் பழக்கம், கட்டுப்பாடற்ற நடத்தைகள், என்பன காரணம் எனக் கூறப்படுகின்றது. அந்த வகையிலே “வீட்டுவன்முறை” என்ற இந்த ஆய்விற்கு மேற் சொன்ன இந்த ஆய்வு பொருத்தப்பாடு உடையதாகக் காணப்படுவதால் “ women”s Experience of male violence” என்கின்ற ஆய்வு இலக்கிய மீளாய்வு செய்யப்படுகின்றது.

Deborah loxton , Rafat hussain , Margot schofield –“ Women”s Experience of dpmestic abuse in rural and remote Australlia” அவுஸ்ரேலியா கிராமங்கள் மற்றும் பழமையான பிரதேசத்தில் காணப்படுகின்ற வீட்டு வன்முறையின் பெண்களது அனுபவங்கள் பற்றி ஓர் ஆய்லாக இது காணப்டுகிறது. இங்கே இளவயது பெண்கள 18-23, நடுத்தர வயது பெண்கள் 45-50 மற்றும் வயோதிப வயது 70-75 வயதினை கொண்ட பெண்கள் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. இது ஒரு பண்புரீதியாக நேர்காணல் முறையினை கொண்டதாக காணப்படுகின்றது இங்கே பெண்களது வீட்டுவன்முறையினால் எற்படும் சுகாதார பாதிப்புக்கள் உளவியல் தன்மைகள் பற்றியுள்ளது. இவ்வகையில் “வீட்டு வன்முறை” எனும் ஆய்விலும் பெண்களது சுகாதார ரீதியான பாதிப்புக்கள் பற்றிய கருத்துக்கள் காணப்படுவதனால் மேற்குறிப்பிட்ட ஆய்வு பொருத்தமுடையதாக இருப்பதால் இலக்கிய மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

அமீனா ஹீசைன் (2000), “இரத்தம் சில வேளைளகளில் தெரிவதில்லை” இலங்கையின் கிராமப்புறங்களில் வீட்டு வன்முறையும்,பாலியல் வல்லுறவும், தேசிய இனத்துவக் கற்கைளுக்கான மையம். பெண்களிற்கெதிரான வன்முறை செயற்றிட்டமானது வீட்டு வன்முறை ,மணவாழ்வில் பாலியல் வல்லுறவு, தகாத உறவு, குடும்ப வன்முறை மற்றும் பாலியல் ரீதியிலான தாக்குதல் ஆகிய விடயங்களை ஆய்விற்க உட்படுத்துகின்றது. வெளிக்கள ஆய்வு நுவரேலியா, அநுராதபுரம், மாத்தறை ஆகிய மூன்று

பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன், அத்துடன் வன்முறைக்கு ஆளான அனுபவங்களைக் கொண்ட பெண்கள், பொலீஸ, நீதித் துறையாளர்கள், சமூக சேவையாளர்கள், பிரதம அதிகாரிகள், சமாதா மண்டல உறுப்பினர்கள், வைத்தியர்கள், மதகுருமார்கள், அரச சாரா நிறுவனங்கள்,மருத்துவ தாதிகள்) ஆகியோருடன் நேர்காணலை மேற்கொண்டதன் மூலம் மிக ஆழமானதொரு ஆய்வினைச் செய்ய முடிந்தது. வினைத்திறன் மிக்க ஒரு கொள்கை உருவாக்கத்தினை ஆற்றுப்படுத்துவதும் எதிர்காலத்தில் வன்முறைக்கு ஆளான பெண்களுக்கான சேவைகளை மேம்படுத்துவதுமே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**4.ஆய்வின் முறையியல்**

**4.1.ஆய்வுப்பிரதேசம்**

பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைக்கான சமூக பொருளாதார உளவியல் காரணங்களும் அதன் விளைவுகளும் எனும் இவ்ஆய்வானது சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.2. ஆய்வின் வடிவமைப்பும், தரவு சேகரிப்பு கருவிகளும்**

ஆய்வானது கலப்பு முறை வடிவம் பயன்படுத்தப்பட்டது. முதலாம் நிலைத் தரவுகளாக: வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானம், பிரதான தகவல் வழங்குனர் நேர்காணல், விடய ஆய்வு மற்றும் குவிமையக்குழுக் கலந்துரையாடல் ஆகியனவும், இரண்டாம் நிலைத் தரவுகளாக கிராம வேவகர்,பிரதேச செயலக மற்றும் மாவட்டச் செயலக வீட்டுவன்முறை தொடர்பான புள்ளிவிபரங்கள், மற்றும் வரைபுகள், ஏனைய மகளிர் அபிவிருத்தி நிலைய அறிக்கைகள், யாழ் போதனா வைத்தியசாலையின் அறிக்கைகள், மற்றும் பெண்களிற்கெதிரான வீட்டுவன்முறை தொடர்பான சில ஆய்வுகளின்முடிவுகள், இணையத் தளங்கள் மூலமாகப் பெற்ற தரவுகள் என்பன அமைகின்றன.

**4.3. மாதிரியும் மாதிரியின் பருமனும்**

மாதிரி எடுப்பு முறையானது நோக்கத்தினாலும், குடியின் தன்மையினாலும் தீர்மானிக்கப்படுகின்றது. பனிப்பந்து மாதிரியெடுப்பு முறையைப் பயன்படுத்தி ஆய்வு முன்னெடுக்கப்பட்டது பெண்களிற்கெதிரான வீட்டுவன்முறையினால் உடலியல், உளவியல், பாலியல்,பொருளாதார ரீதியல் பாதிக்கப்பட்ட அனைத்துப் பெண்களும் உள்ளடக்கப்படுகின்றனர், இதிலே சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்: மாதகல்,சில்லாலை,பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி, மானிப்பாய், நவாலி, சுதுமலை, சாவற்கட்டு, ஆனைக்கோட்டை, உயரப்புலம், வடலியடைப்பு ஆகிய பதினைந்து(15) கிராமங்களிலும் வீட்டவன்முறையினால் பெண் அபிவிருத்தி உத்தியோகத்தர் (01), சண்டிலிப்பாய் பிரதேச செயலக பெண்கள் உத்தியோகத்தர் (03), சண்டிலிப்பாய் பிரதேச மகளிர் நிலையங்களின் தலைவர்கள் (03), சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராம சேவையாளர்கள் (03) என மொத்தமாக பத்து (100) பேர் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

**5. தரவுப் பகுப்பாய்வு**

அட்டவணைகள், வரைபுகள், விளக்கப்படங்கள் என்பவற்றின் மூலம் விளக்கும் வகையில் விவரணப்புள்ளிவிபரப் பகுப்பாய்வு முறைக்குட்படுத்தப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது. இந்தவகையில் பண்பு ரீதியாக தகவல்களை கருப்பொருள் பகுப்பாய்வு அடிப்படையிலும் (Thematic Analysis) புள்ளிவிபரத்தரவுகளினைப்(SPSS) பயன்படுத்தி விபரணப் புள்ளிவிபரவியல் ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**6. ஆய்வின் பெறுபேறுகளும் கலந்தாரய்தலும்**

ஆய்வில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைக்கான சமூக பொருளாதார உளவியல் காரணங்களும் அதன் விளைவுகள் விடயங்கள் ஆய்வுக்குபடுத்தப்பட்டது.

**விடயம் 01 வீட்டு வன்முறைக்குபட்டவர்களின் அடிப்படை விபரங்கள்**

**அட்டவணை-01 வீட்டு வன்முறைக்குபட்டவர்களின் அடிப்படை விபரங்கள்**


| தலைப்பு | விடயம் | எண் | வீதம் |
|---|---|---|---|
| விவாக<br>வருடம் | 1975– 1979<br>1980- 1984<br>1985- 1989<br>1990- 1994<br>1995- 1999<br>2000- 2004<br>2005- 2009<br>2010- 2018 | 04<br>06<br>21<br>20<br>37<br>10<br>23<br>29 | 2%<br>4%<br>14%<br>3%<br>24%<br>6%<br>15%<br>22% |
| சமயம் | கிறிஸ்தவம்<br>இந்து | 35<br>115 | 23%<br>77% |
| வயது | 20 – 25<br>26 – 30<br>31 – 35<br>36 – 40<br>41 – 45<br>46 – 50<br>51 – 55<br>56 – 60 | 4<br>4<br>41<br>38<br>22<br>21<br>18<br>2 | 3%<br>3%<br>27%<br>25%<br>15%<br>14%<br>12%<br>1% |
| கல்வி நிலை | ஆரம்பக்கல்வி(1-5)<br>இடைநிலைக்கல்வி (6-11)<br>உயர்கல்வி | 22<br>106<br>21 | 14%<br>71%<br>14% |
| பால் நிலை | ஆண்<br>பெண் | 272<br>235 | 54%<br>46% |
| குடும்பத் தலைவரின் தொழில் | மேசன்<br>விவசாயம்<br>தச்சு<br>கூலி<br>கடை வைத்திருத்தல்<br>வுரிணம் தீட்டல்<br>வியாபாரம்<br>சீவல் தொழில்<br>தோட்டம்<br>சுாரதி<br>மீன்பிடி<br>மாடு வளர்ப்பு<br>வங்கி வேலை<br>ஆசிரியர் | 23<br>05<br>04<br>14<br>17<br>10<br>07<br>04<br>08<br>28<br>16<br>03<br>07<br>04 | 15%<br>3%<br>3%<br>9%<br>11%<br>6%<br>6%<br>3%<br>5%<br>19%<br>11%<br>02%<br>05%<br>03% |
| வருமானம் | 5000 க்கு மேல்<br>5001- 10000<br>10001-15000<br>15001- 20000<br>20001- 25000<br>25001-30000 | 01<br>04<br>06<br>40<br>23 | 1%<br>3%<br>4%<br>27%<br>15% |

ஆய்வில் பதிலளித்தவர்களில் 2010-2018 விவாக வருடத்திற்குப்பட்டவர்கள் 22% வீட்டுவன்முறைக்குட்ப்பட்டிருப்பதையும், 1975– 1979 விவாகவருடத்திற்குப்பட்வர்கள் 2%வீட்டு வன்முறைக்குட்படடிருப்பதையும் அதிகமானவர்கள் 2010-2018 காலப்பகுதியில் திருமணம் முடித்த இளம்

பெண்களே விவாகமுடித்தவர்கள் வன்முறைக்குப்பட்டுள்ளனர். வீட்டு வன்முறைக்குபட்ட பெண்களின் சமய அடிப்படையில் 23% சிறிஸ்தவர்களாவும், 77% இந்துக்களாவும் உள்ளனர்.வயது அடிப்படையில் வீட்டு வன்முறைக்குப்பட்டபவர்களில் 3% னர் 20–25 வயதிற்குட்பட்டோர் ஆவர். மேலும் 3% னர் 26–30 வயதிற்குட்பட்டோர் ஆவர். மேலும் 27% னர் 31–35 வயதிற்குட்பட்டவர்கள் ஆவர். அதிகளவில் 31– 35 வயதிற்கிடைப்பட்ட பெண்களே வீட்டுவன்முறைக்குட்படடிருப்பதையும், அடுத்த நிலையில் 36 – 40 வயதிற்கிடைப்பட்ட பெண்களும் அடங்குவதனை அட்டவணை -01 மூலம் அறிய முடிகின்றது. வீட்டு வன்முறைக்குட்பட்ட பெண்களின் கல்வி நிலையடிப்படையில் 14% ஆரம்பக்கல்வி (1-5)யையும், 71% இடைநிலைக்கல்வி(6-11)யையும், 14%உயர்கல்வியையும் அதிகமானமானவர்கள் ஆரம்பக்கல்வி நிலையையே கொண்டுள்ளனர். வீட்டுவன்முறைக்குட்பட்ட பெண்களின் குடும்பத்தினுடைய பால் நிலையடிப்படையில் ஆண் 54%மும், பெண் 46%மும் ஆகும். அட்டவணை01 இன் படி 19% சாரதிகளாகவும் 15%மானவர்களாக மேசன் ஆகவும் 11% வீதத்தினர் கடை வைத்திருப்போராகவும் மீன்பிடிகாரர்களாகவும் காணப்படுகின்றனர். இவற்றிற்கு அடுத்த நிலைகளிலேயே ஏனைய தொழில்கள் காணப்படுகின்றன. அட்டவணை 2இன்படி 25001-30000 உட்பட்ட 42% வருமானம் பெறக் கூடியவர்களாகவும் உள்ளனர். ஆய்வுப் பிரதேசத்தில் வினாக்கொத்தினூடாக வீட்டு வன்முறை பற்றி உங்களுக்ககு தெரியுமா என்ற கேள்விக்கு ஆமென 98% மானோரும், இல்லையென 02% மானோரும் பதிலளித்திருந்தனர். மேலும் வீட்டு வன்முறை பற்றிய அவர்களது கருத்து பற்றி நோக்குகையில் வீட்டிலே உள்ளவர்களிடையே ஏற்படுகின்ற சண்டைகள் தான் வீட்டு வன்முறை என 47% மானோரும் கணவன் மனைவிற்கிடையில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் தான் வீட்டு வன்முறை என 22% மானோரும் குடும்பத்திலே பிரச்சனைகள் ஏற்பட்டு ஒன்று சேராமல் பிரிந்திருப்பது தான் வீட்டு வன்முறை என 11% மானோரும் ஆண்களால் பெண்களின் மேல் ஏற்படுத்தப்படுகின்ற ஆதிக்கம் தான் வீட்டு வன்முறை என 10% மானோரும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தனர். *“இது ஒரு பிரச்சினை ஆகும்.*

(மூலம் : வினாக்கொத்து)

இவ்அளவுசார் தரவிற்கு பின்வரும் பண்புசார் தகவல் வலுவூட்டுகின்றது. *யாழ்ப்பான மாவட்டத்தினை பொறுத்த வரை ஒருவரிடத்தில் 200க்கு குறையாத பெண்கள் வீட்டு வன்முறையின் பாதிப்பிற்குள்ளாகிளன்றனர்.அதிலும் கணவனால் பெண்களுக்கு ஏற்படுகின்ற வீட்டு வன்முறைகள் தான் அதிகமாக காணப்படுகின்றது (நேர்காணல் : மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்,யாழ்ப்பான மாவட்டச்*




A -ஆபாசமான படங்கள்பார்க்க கட்டாயப்படுத்தல்
B -நோயுற்றிருக்கும் வேளைகளில் பாலுறவிற்கு கட்டாயப்படுத்தல்
C - இஸ்ரமில்லாத வேளைகளில் பாலுறவிற்கு கட்டாயப்படுத்தல்
D - தொடர்ந்து பாலுறவிற்கு கட்டாயப்படுத்தல்

*செயலகம்).*

**விடயம் 02 பொருளாதார ரீதியிலான சவால்களை சமாளித்தல் பற்றிய விபரம்**

பொருளாதார ரீதியிலான வீட்டு வன்முறைக்கு உட்பட்டதாக கூறிய 128 பெண்களில் ஒருவர் தமக்கு 2 அல்லது 3 சவால்கள் இருந்துள்ளது எனக் குறிப்பிட்டு இருந்தார்கள். 20%மானோர் பெற்றோர் சகோதரர்களின் உதவியினைப் பெற்றும் 19%மானோர் சீட்டுக்கட்டுதல் போன்ற செயற்பாடுகளில்

ஈடுபட்டும், 14% மானோர் கடன் வாங்குதல் என்பனவற்றின் மூலமாகத் தான் தமது பொருளாதார ரீதியிலான வீட்டு வன்முறையினால் ஏற்படுகின்ற சவால்களை சமாளிப்பதாக தமது பதிலினை அளித்திருந்தமையினால் இவ் வரைபின் மூலமாக அறிந்த கொள்ளக் கூடியதாகவுள்ளது.

**விடயம் 03 பாலியல் ரிதீயிலான வீட்டு வன்முறை பற்றிய பகுப்பாய்வு**

பெண்களிற்கெதிரான வீட்டுவன்முறை எனும் வகைப்பாட்டினுள் முக்கியமாக ஒரு பிரிவாக பாலியல் ரீதியிலான வீட்டு வன்முறை காணப்படுகின்றது. அவ் வகையிலே 34 பேர் பாலியல் ரீதியிலான வீட்டு வன்முறைக்கு உள்ளாகியிருப்பதாக வினாக்கொத்தின் வழி கூறியிருந்தார்கள். வரைபு1இன் படி பாலியல் ரீதியிலான வீட்டு வன்முறை ஏற்பட்டுள்ளது, என பதிலளித்த 34 பேரில் 30%மானோர் நோயுற்றிருக்கும் வேளை பாலுறவிற்கு கட்டாயப்படுத்தல் எனவும், 29% மானவர்கள் ஆபாசமான படங்களை பார்க்க கட்டாயப் படுத்தியதாகவும், 21%மானோர் இஸ்ரமில்லாத வேளைகளில் பாலுறவிற்கு கட்டாயப்படுத்தியதாகவும், 20% மானோர் தொடர்ந்து பாலுறவினை மேற்கொள்ளக் கட்டாயப்படுத்தியதாகவும், வினாக் வரைபு கொத்தினூடாக தமது விடைகளைப் பதிவு செய்திருந்தனர். இவ்அளவுசார் தரவிற்கு பின்வரும் பண்புசார் தகவல் வலுவூட்டுகின்றது. ''*வீட்டு வன்முறை அதிகளவில் இடம் பெறுவதற்கு முக்கிய காரணம் பாலியல் ரீதியிலான செயற்பாடுகளேயாகும், உதாரணமாக எம்மிடம் முறைப்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள் சிலவற்றை சொல்லலாம் என நினைக்கின்றேன், கணவன் நீலப்படம் ( BLUE FILM) பார்த்து விட்டு தனது மனைவியிடம் அவ்வாறே தன்னுடன் செயற்பட அழைத்தல் ஆனால் அவள் அவ்வாறு செயற்படாத வேளைகளில் அவளுக்கு அடித்தல், பிறகு தனது பெண்தோழியுடன் இணைந்து பாலியல் ரீதியிலான செயற்பாட்டினை மனைவிக்கு செய்து காட்டி அவ்வாறு தனது மனைவியையும் தன்னுடன் இருக்க அழைத்தல்,அவளால் அவ்வாறு செயற்பட முடியாத தருணங்களில் கழுத்தை திருகுதல், போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுதல் எனக் கூறினார். மேலும் இன்னொரு பாலியல் ரீதியிலான வீட்டு வன்முறை பற்றி கூறுகையில் தனது கணவன் மனைவியினை பிள்ளைகளுக்கு முன்பாக பாலியல் உறவிற்கு அழைத்தல்.அவள் மறுக்கின்ற சந்தர்ப்பங்களில் அவளது ஆடைகளைக் களைதல், போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகிறார். ஏன அவர் அவ் நேர்காணலிலே கூறியிருந்தார்*'' (பிரதான தகவல் தருநருடனான நேர்காணல்,உளவளத்துணை உத்தியோகத்தர்,சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்).

''*எனக்கு இப்போது 26 வயது. எனக்கு 19 வயதாக இருக்கும் போது காதலித்து திருமணம் செய்தேன், அவர் குடித்து விட்டு வந்து என்னை அடிப்பார் படுக்கையில் விழுத்தி எனது ஆடைகளை அகற்றுவார் பின்னர் எனது உடலில் தண்ணீரை ஊற்றுவார். பிறகு என்னுடன் உடலுறவு கொள்ளுவார், நான் ஒன்றும் செய்வதில்லை…..*'' (விடய ஆய்வு). குடும்ப ரீதியிலான சவால்களை எதிர்நோக்குகின்றோம் எனப் பதிலளித்த 95%மானோரில் வரைபு 2இன் படி 27 %மானோர் ஏதாவது ஒரு இடத்திற்குப் போவதற்கு வருவதற்கு சுதந்திரம் இல்லை எனவும், 21%மானோர் சொந்தமாக நேரத்தினைப் பயன்படுத்த முடியாமை எனவும், 19%மானோர் -நீங்களாகத் தீர்மானம் எடுக்க முடியாமை என தமது பதில் களை பதிவு செய்திருந்தனர். இவ்அளவுசார் தரவிற்கு பின்வரும் பண்புசார் தகவல் வலுவூட்டுகின்றது. *"எனக்கு 46 வயதாகி விட்டது, தரம் 11 படிக்கும் போது காதலித்து தான் திருமணம் செய்து கொண்டேன், எனக்கு மாமியார் மற்றும் கணவரால் கட்டுப்பாடுகள் கூட, எங்கேயும் ஒரு இடம் போக முடியாது, போனால் எங்கே ஆடப் போகிறாய் , யாரைப் பார்க்கப் போகிறாய் என, தரக் குறைவான வார்த்தைகளால் திட்டுதல் இதனை விட வீட்டில நான் தொலைக்காட்சி பார்க்க முடியாது. வீட்டிற்கு யாரும் வந்தால், நான் முன்னிற்கு வந்து கதைக்க முடியாது''* (விடய ஆய்வு).

**விடயம் 4 :குடும்ப ரீதியிலான சவால்கள் பற்றியது**

**அட்டவணை2 :குடும்ப ரீதியிலான சவால்கள் பற்றியது**

| விடயம் | எண் | வீதம் |
|---|---|---|
| எதுவுமே செய்வதில்லை பேசாமலிருத்தல் | 61 | 43% |
| கணவர் இல்லாத தருணங்களில் வெளியில சென்று வருதல் | 19 | 13% |
| கணவரது சொல்லிற்கு கீழ்ப்படிதல் | 34 | 23% |
| பிள்ளைகளிடம் சொல்லுதல் | 07 | 05% |
| பெற்றோர் சகோதரர்களிடம் சொல்லுதல் | 06 | 04% |
| சொல்லிப் புரிய வைத்தல் | 03 | 02% |
| அம்மாவின் வீடு செல்லல் | 11 | 09% |
| மொத்தம் | 100 | 100% |

அட்டவணை 2 இன் படி 43%மானோர் குடும்ப ரீதியிலான கட்டுப்பாட்டுக்கு பழக்கப்பட்டு விட்டதனால் எதுவித செயலிலும் ஈடுபடாமல் பேசாமல் இருப்பதாகவும், 23%மானோர் கணவரது சொல்லிற்கு கீழ்ப்படிபவர்களாகவும், கணவர் போகச் சொன்னால் செல்லல், போக வேண்டாம் என்றால் செல்வதில்லை எனவும், 13%மானோர், கணவர் இல்லாத தருணங்களில் செல்வதாகவும் 2%மானோர் கணவரிற்கு சொல்லிப் புரிய வைத்தல் எனவும், கூறியிருந்தார்கள். இவ்அளவுசார் தரவிற்கு பின்வரும் பண்புசார் தகவல் வலுவூட்டுகின்றது. “*அவர் வருகின்ற தருணங்களில் நான் வீட்டிலே இல்லையெனில் கதவு வார்க்கட்டையினால் அடி விழும், அதனால் நான் எங்குமே செல்வதில்லை. வீட்டிலே .இருந்து கொள்வேன்” (விடய ஆய்வு).* (மூலம்: வினாக்கொத்து)


**விடயம் 5: சமூகரீதியிலான சவால்கள் பற்றியது**

மேலும் அட்டவணை 3 இன் பிரகாரம் 34%மானோர் பெரிதாக சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை எனவும் 26% மானோர் எதுவுமே காதில் வாங்குவது இல்லை எனவும், 21%மானோர் பழகிப்போய்விட்டது எனவும், 11 % மானோர் சமூகத்திலே துணிவுடன் செயற்பட வேண்டுமெனவும், 8%மானோர் பக்கத்திலுள்ள ஆலயம் சென்று வழிபடுதல் எனவும் கூறியிருந்தனர், இவ்வாறு தான் பெண்கள் சமூக ரீதியில் சவால்களை எதிர்கொள்கின்றார்கள், வீட்டு வன்முறையினால் பெண்கள் எதிர் கொண்ட சவால்கள் பற்றி நோக்குகையில் சமூக ரீதியில் சவால்களை எதிர் கொண்டுள்ளோம் என 45% மானோரும் (68 பேர்), சமூக ரீதியிலான சவால்களை எதிர் கொள்ளவில்லை என, 55% மானோர் (82 பேர்), கூறியிருந்தனர்.

**அட்டவணை 3 : சமூகரீதியிலான சவால்கள் பற்றியது**

| விபரம் | எண் | வீதம் |
|---|---|---|
| பெரிதாக சமூக நிகழ்வகளில் கலந்து கொள்வதில்லை | 23 | 34% |
| எதுவுமே காதில் வாங்குவது இல்லை | 18 | 26% |
| பழகிப் போய்விட்டது. | 14 | 21% |
| சமூகத்திலே துணிவுடன் செயற்படுதல் | 8 | 11% |
| பக்கத்தில் உள்ள ஆலயம் சென்று வழிபடல் | 5 | 8% |

**வரைபு 3 : முறைப்பாடு செய்தல் பற்றியது**




ISBN: 978-624-5736-37-9 15th December 2022, Faculty of Arts & Culture, SEUSL

| | | |
|---|---|---|
| மொத்தம் | 68 | 100% |

(மூலம் : வினாக்கொத்து)

வரைபு 3இன் படி 30% மானவர்கள் பிரதேச செயலகத்தினரிடமும், 24%மானோர் பொலிஸிடமும் 13%மானோர் மதத் தலைவர் மறறும் வைத்தியசாலைகளில் முறைப்பாடு செய்திருந்தனர்,12% மானோர் கிராம சேவையாளர்களிடமும், 3 % மானவர்கள் மாதர்சங்க தலைவரிடமும் முறைப்பாடு செய்ததாகக் கூறியிருந்தனர்.

**அட்டவணை 4: முறைப்பாடு செய்யாமைக்கான காரணணம் பற்றியது**

| விபரம் | எண் | வீதம் |
|---|---|---|
| வீட்டுகௌரவம் பாதிக்கப்படும் என்பதால் | 40 | 67% |
| காதல் திருமணம் என்பதனால் | 02 | 03% |
| இரண்டாம் தாரமாக மணமுடித்தமையினால் | 05 | 08% |
| கணவன் என்பதனால் | 08 | 14% |
| அரச பதவிகள் வகிப்பதனால் | 05 | 08% |
| மொத்தம் | 60 | 100% |

| விபரம் | எண் | வீதம் |
|---|---|---|
| ஆண்களிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் | 80 | 53% |
| பெண்கள் பயப்படக் கூடாது | 20 | 13% |
| ஆண்-பெண் இருவருக்குபான விழிப்புணர்வு | 20 | 13% |
| கடுமையான சட்ட நடைமுறை | 2 | 1% |
| அன்பால் திருத்தலாம் | 4 | 3% |
| பொலிஸ் பொறுப்பாக செயற்படல் | 10 | 7% |
| கிராம உத்தியோகத்தர் கவனித்தல் | 14 | 9% |
| மொத்தம் | 150 | 100 |

அட்டவணை 4 இன் பிரகாரம் 67 மூமானோர் வீட்டு கௌரவம் பாதிப்படையும் என்பதனாலும், 14% மானோர் கணவன் தானே என்பதனாலும் முறைப்பாடு செய்யவில்லை எனக் கூறியிருந்தனர். இவ்அளவுசார் தரவிற்கு பின்வரும் பண்புசார் தகவல் வலுவூட்டுகின்றது *“எனக்கு வயது 43 ஆகிவிட்டது எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள், இருவரும் கல்வி கற்கின்றார்கள்,எனது கணவன் எனக்கு காயம் வரும் வகையில் பெல்ற்றால் அடிப்பார்,கெட்ட வார்த்தைகளால் பேசுவார், வெயிலத்திற்குள் விடுவார், இருப்பினும் நானும், பொலிஸ்,பிரதேச செயலகம் என்று போவதில்லை, போனால் வீட்டு கௌரவம் போய்விடும், மற்றும் அடித்தாலும், குத்தினாலும் அவர் தானே எங்கள பார்க்க வேண்டும் என்பதனாலும்,கணவன் தானே என்பதனால் விட்டு விடுவேன் என்று கூறினார்”*

**விடயம் 6 : வீட்டு வன்முறை தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு பற்றியது**

**அட்டவணை 5 வீட்டு வன்முறை தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடு பற்றியது**

அட்டவணை 5 இன் படி குடும்ப வன்முறைக்குப்பட்ட பெண்களில் 53% ஆண்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் எனவும், 13% பெண்கள் பயப்படக் கூடாது, ஆண்-பெண் இருவருக்குமான விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறினர், இவ்அளவுசார் தரவிற்கு பின்வரும் பண்புசார் தகவல் வலுவூட்டுகின்றது.

*''எனக்கு 25 வயது. ஆனால் இந்த வயதில நல்லா அனுபவிச்சிற்றன், என்னைப்பொறுத்த வரை ஆண்களிற்கு நல்ல விழிப்புணர்வு ஏற்படுத்தினால் தான் சமூகம் திருந்தும் என்றார்''* எனவே இவ் விடய ஆய்வின் வழி அவரது ஆலோசனையினைப் புரிந்து கொள்ள முடிகின்றது. *வீட்டு வன்முறையினால் சமூக ரீதியில் எத்தகைய பிரச்சினைகள் ஏற்படுகிறது. என்பதற்கு எமது ஊரிலே நான் கண்ட ஒரு பிரச்சினையினை கூறலாம் என நினைக்கின்றேன் , ஒரு பெண் ஆசிரியர் கல்வி கற்பித்துக் கொடுக்கும் மாணவன் வயது (18) தம்பி மீது மோகம் கொண்டு அப் பையனைக் காதலிப்பதாக கூறியிருந்தார், இது ஆசிரியரின் கணவருக்குத் தெரிய வர வீட்டு வன்முறை ஏற்பட்டது. இதனால் அப் பெண்ணிற்கு சமூகத்திலே ஒரு கூடாத பெயர் காணப்படுகின்றது. இதனை விட தற்போது கணவன் ஒரே அடிப்பதனால் 2 தடவை தற்கொலைக்கு கூட முயற்சித்துள்ளார், எனக் கூறினார்''* பிரான்பற்று (மாதர் சங்கத் தலைவி).

**முடிவுரை**

ஆய்வில் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முடிவாக பெண்களுக்கெதிரான வீட்டு வன்முறைக்கான சமூக பொருளாதார உளவியல் காரணங்களும் அதன் விளைவுகளும போன்ற விடயங்கள் ஆய்வுக்குபடுத்தப்பட்டது. வீட்டு வன்முறை என்பது கணிசமான அளவு ஆய்வுக்களத்தில் அவதானிக்க கூடியதாகவிருந்தது. 2010-2018 விவாக வருடத்திற்குப்பட்டவர்கள் 22% வீட்டு வன்முறைக்குட்பட்டடிருப்பதையும், 77% இந்துக்களாவும், வயது அடிப்படையில் வீட்டு வன்முறைக்குபட்டபவர்களில் 27% னர் 31–35 வயதிற்குட்பட்டவர்களாகவும், 71% இடைநிலைக்கல்வி(6-11)யையும், குடும்பத்தலைவரது தொழிலாக 19% உள்ளனர். இக்குடும்பங்களின் 25001-30000 உட்பட்ட 42% வருமானம் பெறக் கூடியவர்களாகவும் உள்ளனர். மேலும் இதனை 98% மானவ பெண்கள் தமக்கு வீட்டு வன்முறை ஏற்பட்டுள்ளது எனக் கூறியதன் வழி நிரூபிக்கக் கூடியதாகவுள்ளது. மேலும் 31-க்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களே அதிகளவில் வீட்டு வன்முறைக்கு ஆளாகியிருப்பதனை காணக் கூடியதாகவுள்ளது. வீட்டுவன்முறை ஏற்படுவதற்கு மதுப்பாவணை மற்றும் நம்பிக்கையின்மை போன்ற காரணிகள் முக்கியமானதாகக் காணப்படுகின்றது, வீட்டு வன்முறையின் வகை பற்றி நோக்குகையில் அய்வுப் பிரதேசத்தில் 26%க்கும் அதிகமான பெண்கள் உடலியல் ,உளவியல்,பொருளியல் மற்றும் பாலியல் ரீதியிலான வீட்டு வன்முறைக்கு உள்ளாகியிருப்பதனை காணமுடிகின்றது. இருப்பினும் அதிகளவிலானோர் 37%மான பெண்கள் உளவியல் ரீதியிலான வீட்டு வன்முறைக்கு உட்பட்டுள்ளதனை காணமுடிகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் வீட்டு வன்முறை பற்றி உங்களுக்கு தெரியுமா என்ற கேள்விக்கு ஆமென 98%ஆனர்கள் வீட்டிலே உள்ளவர்களிடையே ஏற்படுகின்ற சண்டைகள் தான் வீட்டு வன்முறை என 47%ஆனர்கள் குறிப்பிட்டனர். பொருளாதார ரீதியிலான வீட்டு வன்முறைக்கு உட்பட்டதாக கூறிய 128 பெண்களில் ஒருவர் தமக்கு 2 அல்லது 3 சவால்கள் இருந்துள்ளது எனக் குறிப்பிட்டு இருந்தார்கள். பொருளாதார சவால்களை சமாளித்தினைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து 20%மானோர் பெற்றோர் சகோதரர்களின் உதவியினைப் பெற்றும் 19%னோர் சீட்டுக்கட்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டும், 14%மானோர் கடன் வாங்குதலினையும் பொறிமுறையாகக் கொண்டுள்ளனர்.பொருளாதார வீட்டு வன்முறை பற்றிப் பார்க்கையில் சீதனம் கேட்டு பெண்கள் அதிகளவில் துன்புறுத்தப்பட்டிருக்கின்றார்கள், பாலியல் ரீதியிலான வீட்டு வன்முறைகுப்பட்டதாக 4% பதிலளித்ததுடன், 30% மானோர் நோயுற்றிருக்கும் வேளை பாலுறவிற்கு கட்டாயப்படுத்தலினை குறிப்பிட்டனர். சமூக ரீதியான 34% மானோர் பெரிதாக சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை எனக் குறிப்பிட்டனர். அதிகமானவர்கள் இவ்வன்முறை சார்ந்து 30%பிரதேச செயலகத்தினரிடமும் முறைபாடு செய்துள்ளனர். 67 மூமானோர் வீட்டு கௌரவம் பாதிப்படையும் என்பதனாலும், 14% மானோர் கணவன் தானே ஆகியன காரணமாக முறைப்பாடு செய்யாத பெண்களும் காணப்படவே செய்கின்றனர்.

**5.2. விதந்துரைகள்**

பெண்களிற்கெதிரான வீட்டு வன்முறையினைக் கட்டுப்படுத்துவதற்கும், அல்லது அதனைக் குறைப்பதற்கும் தீர்வுகள் இனங்காணப்பட வேண்டியது இன்றியமையாதது ஆகும். ஆந்த வகையிலே வீட்டு வன்முறையினைக் குறைப்பதற்கான பரிந்துரைகள் வருமாறு:

- 2005 ஆம் ஆண்டு ஆவணி மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வீட்டு வன்முயை தடுப்பு மசோதா வெற்றிகரமாகச் செயற்படுத்தப் பட வேண்டும்
- இல்லத்தின் தலைவர்களாக மனைவி ,கணவன் இருவரையும் அங்கீகரித்தல் தொடர்பான திருத்தத்தினை சட்டத்தில் மேற்கொள்ள வேண்டும்,
- சட்டம் பற்றியும், தமக்குரிய சட்ட உரிமைகள் பற்றியும் பெண்களிற்கு விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டு சட்டம் சார்ந்த அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்படல் வேண்டும்.
- பெண்கள் தொடர்பான பாரபட்சம் காட்டுதல் பற்றிய முறைப்பாடு ஆராய்வதற்குரிய பெண்களுக்கான தேசிய ரீதியான ஆணையம் ஒன்றை நிறுவுதல். ஊடகங்களால் கூடிய வளங்களைப் பயன்படுத்தலும் விளம்பர நடவடிக்கைகளினை மேற்கொள்ளலும் செய்ய வேண்டும்
- சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினைப் பொறுத்தவரை பெண்களின் முறையீடுகளை பொறுப்பேற்பதற்கு பயிற்றப்பட்ட பெண் உத்தியோகத்தர்களையும், போதிய அளவு அதற்கான உட்கட்டமைப்புக்களையும் கொண்ட பிரத்தியேகப் பணி நிலைகள் 24 மணி நேரமும் தயாரான நிலையில் திறந்திருக்க ஏற்பாடு செய்தல்,
- வீட்டு வன்முறைக்கு உட்படும் பெண்களை துணிவுடன் செயற்படுவதற்கு வேண்டிய துணிவு அவர்களிலே வளர சமூக உத்தியோகத்தர்கள் முனைப்பாகச் செயற்பட வேண்டும்.
- வீட்டு வன்முறையினால் ஒரு பெண் எவ்வாறான சவால்களை எதிர் கொள்கின்றாள் என்பது தொடர்பாக ஆண்கள் மத்தியில் விழிப்புணர்வினை மேற்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு கிராமத்திற்கும் பொறுப்பாக இருக்கும் மாதர் சங்க தலைவர்கள் மற்றும் கிராம சேவையாளர்களது அர்ப்பணிப்பான செயற்பாடு இருக்க வேண்டும்.
- பொலீஸ் கூடிய கவனம் எடுத்து செயற்டபட வேண்டும், ஆனால் பொலிஸ் சிறுவர் விவகாரங்களிற்கு கொடுக்கின்ற முக்கியத்துவம், இதற்கு கொடுக்கிற போக்கு குறைவாக காணப்படுகின்றது. இந் நிலை மாறி பொலிஸார் இது இதாடர்பில் கவனமெடுகக்க வேண்டுமாயின் அவர்களிற்கு முதலில் இது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தல் வேண்டும்.
- திருமணம் செய்த காலம் முதலேயே தம்பதியர்களிற்கிடையிலான புரிந்துணர்வினை வளர்பதிலேயே இருவரும் கவனம் செலுத்தடன், இளவயது திருமணம் நடைபெறவதைக் குறைக்க வேண்டும்,
- மதுப்பாவணையில் ஈடுபடும் ஆண்கள் தொடர்பில் கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும்
- முக்கியமாக வீட்டு வன்முறை தொடர்பில் பெண்கள் வெடகப் படாமல் துணிவாகச் செயற்படல் வேண்டும்,
- வீட்டு வன்முறை இனிமேல் சமூகத்தில் முகிழ்க்க கூடாது எனின் பாடசாலைகளில் பிள்ளைகளிற்கு இது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்.
- இவ்வாறு செய்வதனூடாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் காணப்படுகின்ற பிரச்சினைகளை குறைத்து கொள்ள முடியும், இவ்வாறு இவ் ஆய்விற்கான விதந்துரை அமைகின்றது.

**உசாத்துணைகள்**

Ameena,H. (2000). *Sometimes there is no blood: domestic violence and rape in rural Sri Lanka*. Sri Lanka: International Centre for Ethnic studies (ICES).

Alhabib,S., Nur,U.,Jones,R. (2009). *Domestic violence Against women" Systemetic Review of Prevalences Studies,* London.

Brubaker,T. (1993).*Family relation: challenges for the future*. London: Sage Publication.

Catani, C., Jacob, N., Schauer, E. et al. *Family violence, war, and natural disasters: A study of the effect of extreme stress on children's mental health in Sri Lanka*. BMC Psychiatry 8, 33 (2008). https://doi.org/10.1186/1471-244X-8-33

Domesstic violence against women and girl. (1999). UNICEF (United Nations Children" s Fund). Italy: Innocenti Research Centre Florence.

Deborah loxton , Rafat Hussain. (2003), Margot schofield –" *Women"s Experience of dpmestic abuse in rural and remote Australlia"* –School of health the the university of new England.

Gracia,E.(2014*)."Attitudes towards reporting domestic violence against women: Methodological and Ethical consideration"* Population council.

Jenny mouzos, Tonny mokki. (2004). *" Women"s Experiences Of Male Violence* " – Findings from the Australian Component of the international violence against women survey.

MeryEllsberg,L.(2002), *Bearing witness: ethics in domestic violence research*",United States of America.

Monachie,M. and Vanzyl,M. (1994). *"Promoting personal safety for women: women set an agenda for policy formulation*", Human science research Pretoria.

Morgolin, G. (1987). *The multiple forms of aggressiveness between marital partners:* Journal of Marital and Family Therapy.

Swan SC. Gambone ,LJ Caldwell J.E, Sullivan T.P, Snow D.L. A review of research on women's use of violence with male intimate partners. Violence Vict. 2008;23(3):301-14. doi: 10.1891/0886-6708.23.3.301. PMID: 18624096; PMCID: PMC2968709.

*இலங்கையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பு.* (2013). உலக சுகாதார அமையம்.

*வீட்டு வன்முறைத் தடைச்சட்டம்:* (2011), குடும்பக் கருத்தியல் மற்றும் இலங்கையின் பண்பாட்டுக்கதையாடல்கள் பற்றிய ஓர் ஆய்வு, இனத்துவக் கற்கைகளுக்கான சர்வெச நிறுவனம் (ICES).

*சட்டமும் நீங்களும்.*(2010).மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம், திருகோணமலை.

சண்டிலிப்பாய் செயலக அறிக்கை,(2018).

*நம்மால் முடியும்.* (2015). சர்வதேச குற்றத் தடுப்பு மற்றும் பாதிக்கப்பட்டோர் நலம்நாடும் மையம்(PCVC).